பட்டினமும் சூழலும் பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 யூன் 21 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 28 ஆம் திகதி தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபை காசு மற்றும் அட்டுறு அடிப்படைகளில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்திருந்தது. எனினும் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டது என்ற கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(அ) சபையின் இரண்டு வங்கிக் கணக்குகள் தொடர்பாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசேட்டின் படியான வங்கி மீதி முறையே ரூபா 8,171,992 மற்றும் ரூபா 1,267,346 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் அத்திகதியில் உள்ளவாறான வங்கி மீதியாக முறையே ரூபா 8,511,261 மற்றும் ரூபா 1,238,839 தொகைகளாகக் காட்டப்பட்டதனால் வங்கி மீதி ரூபா 310,762 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. இத்தொகையினை அடையாளம் கண்டு சீர் செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஊழியர் கடன் பதிவேட்டின் படி ஊழியர் கடன் மீதி ரூபா 14,750,053 ஆகக் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் ஊழியர் கடன் மீதி ரூபா 16,663,777 ஆகக் காணப்பட்டது. இதனால் ஊழியர் கடன் மீதி ரூபா 1,913,724 தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

அறவிட வேண்டிய வீதவரி ரூபா 12,454,562 தொகை தொடர்பான காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் கணக்காய்வின் போது மீதியை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதியின் அத்தியாயம் X இன் பிரிவு 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் பிரிவு 571 | 03 தொடக்கம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 12,572,920 தொகையான கேள்வி, நானாவித மற்றும் ஒப்பந்த வைப்புக்கள் நிதிப்பிரமாணத்தின் படி கொடுத்து தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமா்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி சபையின் செயற்பாடுகள் 2017 திசெம்பா் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 22,272,975 விளைவித்திருந்ததுடன் அதற்கு முன்னைய ஆண்டின் செலவினத்திலும் கூடிய வருமானமாக ரூபா 36,592,654 விளைவித்திருந்தமை நிதிசாா் விளைவுகளில் ரூபா 14,319,589 பின்னடைவைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

(அ) சபையினால் சமா்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், வருமான நிலுவை என்பன தொடா்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | பாதீடு | ஆண்டுக்கான வருமானம் | பெறப்பட்ட வருமானம் | 2017.12.31 இல் நிலுவை | பாதீடு | ஆண்டுக்கான வருமானம் | பெறப்பட்ட வருமானம் | 2016.12.31 இல் நிலுவை |
| | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" | ரூபா "000" |
| வீதவரிகள் | 26,404 | 22,479 | 26,058 | 12,454 | 24,918 | 25,811 | 25,955 | 15,182 |
| வுாடகை | 2,684 | 3,519 | 3,056 | 1,310 | 21,880 | 2,127 | 2,119 | 94 |
| அனுமதி பத்திர கட்டணம் | 4,028 | 6,351 | 2,271 | 99 | 2,072 | 2,075 | 1,951 | 752 |
| ஏனையவை | 25,538 | 11,779 | 7,312 | 4,466 | 15,786 | 19,096 | 7,312 | 11,783 |

(ஆ) விடுதி வாடகை, கட்டட வாடகை மற்றும் உப்புவெளி சந்தைக் குத்தகை என்பன தொடர்பாக ரூபா 1,604,569 மொத்தத் தொகையினை அறவீடு செய்ய சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

#### 3.1.1 காலதாமதமான ஒப்பந்தங்கள்

மாகாண சபைகள் மற்றும் உள்@ராட்சி அமைச்சின் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் நித்தியபுரி பிரதான வீதிக்கு கொங்கிரீட் இடுதலுக்கான ஒப்பந்தம் ரூபா 5,726,892 தொகைக்கு ஒரு ஒப்பந்தக்காரருடன் 2017 செப்தெம்பர் 18 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. இவ் வேலை 2017 நவம்பர் 07 ஆம் திகதி நிறைவுறுத்தப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதியான 2018 ஆகஸ்ட் 10 ஆம் திகதி வரை இவ்வேலை நிறைவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 3.1.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை எவ்வித அறிவினையும் கொண்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவப் பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2017 ஆம் ஆண்டின் இருப்புக் கணக்கெடுப்பின் போது சபையினால் பராமரிக்கப்படும் சாம்பல்தீவு நூலகத்தில் 1486 புத்தகங்கள் தொலைந்து போணமை சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் அவை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண நிதி ஒழுங்கு விதி இல 163.3 இன் பிரகாரம் செலுத்தப்பட்ட முற்பணங்கள் அனைத்தும் 10 நாட்களுக்குள் தீர்த்து வைக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 01 தொடக்கம் 18 வருடங்கள் பழமை வாய்ந்த ரூபா 2,356,250 பெறுமதியான முற்பணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.3 சொத்து முகாமைத்துவம்
---------------------------------------

3.3.1 சொத்துக்களைப் பதிதல்
--------------------------------------

ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட 08 வாகனங்கள் 11 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவற்றை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.3.2 பயன்படுத்தப்படாமலுள்ள சொத்துக்கள்
------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) புறநெகும திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2014 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட 16 கடைகளைக் கொண்ட கடைத்தொகுதியில் 08 கடைகள் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை பயன்படுத்தப்படாது காணப்படுகின்றது.

(ஆ) சபை நிதியின் கீழ் சாம்பல் தீவு கலாச்சார மண்டபம் ரூபா 900,305 தொகையில் 2015 ஆகஸ்ட் 31 ஆம் திகதி திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் இக்கட்டிடத்தை பயன்படுத்துவதற்கான நீர் மற்றும் மின்சார வசதிகள் செய்யப்படாமையால் கணக்காய்வுத் திகதியான 2018 ஆகஸ்ட் 10 ஆம் திகதி வரை இக்கட்டடம் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்படுகின்றது.

3.4 பெறுகை நடைமுறைகள்
---------------------------------------

3.4.1 பெறுகைத் திட்டம்
------------------------------

தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 128 ஆம் இலக்க 2006 மார்ச் 24 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டம் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3.5 ஒப்பந்த முகாமைத்துவம்
----------------------------------------

3.5.1 பல்நோக்கு மண்டபம் நிர்மாணம்.
-----------------------------------------------------

சபை நிதி ஒதுக்கீட்டின் பலநோக்கு மண்டப நிர்மாண ஒப்பந்தம் ரூபா 5,464,591 தொகைக்கு ஒரு ஒப்பந்தகாரருக்கு 2017 யூன் 14 ஆம் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக கணக்காய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) ஒப்பந்தத் தொகையான ரூபா 5,464,591 தொகைக்கும் சபையின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 6,647,822 தொகைக்கும் இடையில் 17.79% வித்தியாசம் காணப்பட்டமையினால் செயலாற்றல் முறி பெறப்படும் போது ஒப்பந்தத் தொகையில் 10% ஆன ரூபா 546,459 தொகை அறவிடப்பட வேண்டுமென தொழில்நுட்பக் குழுவினால் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையானது ரூபா 273,230 தொகை மாத்திரமே அறவிட்டிருந்தது.

(ஆ) இவ்வேலை ஒப்பந்தத்தின் பிரகாரம் 2017 நவம்பர் 28 ஆந் திகதி ஒப்பந்தக்காரரால் நிறைவு செய்யப்பட்டு சபையிடம் கையளிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2018 ஆகஸ்ட் 10 ஆம் திகதி வரை மாபிள் பதித்தல், குளியலறை வேலைகள், நீர் இணைப்புப் பெறல் போன்ற ரூபா 3,018,276 பெறுமதியான 55% வேலைகள் நிறைவுறுத்தப்படாமல் இருந்த போதிலும் இது தொடர்பாக சபை மேலதிக நடவடிக்கையினை எடுத்திருக்கவில்லை.

3.5.2 உள்ளக விளையாட்டு மைதானம் நிர்மாணித்தல்

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி ஒதுக்கீட்டின் கீழ் உள்ளக விளையாட்டு மைதானம் நிர்மாணம் செய்வதற்கான ஒப்பந்தம் ரூபா 3,862,000 தொகைக்கு 2017 நவம்பர் 06 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குறிப்பிட்ட வேலைகளுக்கு மதிப்பீட்டுத் தொகையை விட ஒப்பந்தக்காரரின் தொகை 20% இற்கு குறைவாக காணப்பட்டிருந்த போதிலும் தொழில்நுட்பப் பகுப்பாய்வுக் குழு பெறுகை வழிகாட்டியின் 7.9.11 இன் பிரகாரம் நடைமுறைகளை மேற்கொள்ளாது ஒப்பந்தத்தை வழங்குவதற்கு பரிந்துரை செய்திருந்தது.

(ஆ) கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கு மதிப்பீட்டுத் தொகையை விட ஒப்பந்தக்காரரின் தொகை 30% இற்கு அதிகமாக காணப்பட்டிருந்த போதிலும் தொழில்நுட்பப் பகுப்பாய்வுக் குழு கருத்தில் கொள்ளாது ஒப்பந்தத்தை வழங்குவதற்கு பரிந்துரை செய்திருந்தது.

(இ) மதிப்பீட்டின் பிரகாரம் வேலைகளை செய்து முடிக்காமல் கட்டடத்தில் மாற்றங்களை ஏற்படுத்திமையால் ரூபா 517,482 பெறுமதியான சில வேலைகள் மதிப்பீட்டை விட அதிகமாக செய்ய வேண்டி ஏற்பட்டது. இவ் வேலைகளுக்கான ESR அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. மேலும் திட்டமிட்டபடி கட்டடத்தினை நிர்மாணிக்காமல் மாற்றங்களை ஏற்படுத்தியமையினால் இக்கட்டடம் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு முழுமைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 427,775 பெறுமதியான கீழ் குறிப்பிடப்பட்ட வேலைகள் கணக்காய்வுத் திகதியான 2018 ஆகஸ்ட் 10 ஆம் திகதி வரை முற்றாக செய்யப்பட்டிருக்கவில்லை.

3.5.3 வடலிப் பிள்ளையார் கோயில் வீதி திருத்தம்

பின் தங்கிய உள்@ராட்சி அதிகார சபைக்களுக்கான அபிவிருத்தி உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வடலிப் பிள்ளையார் கோயில் வீதியைத் திருத்தம் செய்வதற்காக சபையினால் ரூபா 799,860 தொகைக்கு 2016 திசெம்பர் மாதத்தில் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இவ் வேலைக்குத் தேவையான தார் பரல்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமிருந்து ஒரு பரல் ரூபா 9,900 தொகையும் போக்குவரத்துச் செலவு ரூபா 1,000 தொகையையும் சேர்த்து ரூபா 10,900 தொகைக்கு கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்த போதிலும் ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து ஒரு பரல் ரூபா 13,000 விலையில் 28 பரல்களையும் கொள்வனவு செய்ததனால் ரூபா 58,800 தொகையை மேலதிகமாகச் செலுத்தவேண்டி ஏற்பட்டது.

(ஆ) இவ்வேலைக்காகத் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் 4356 லீற்றர் தார் போதுமானது எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் 5040 லீற்றர் தார் (28 பரல்) கொள்வனவு செய்யப்பட்டிருந்ததனால் 2017 ஜூன் 21 ஆம் திகதி மேற்கொண்ட கணக்காய்வு பரிசோதனையின் போது மேலதிகமாகக் கொள்வனவு செய்யப்பட்ட 684 லீற்றர் தார் களஞ்சியத்தில் காணப்படாமையால் சபைக்கு ரூபா 49,390 தொகையான இழப்பு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக சபையினால் இன்றுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் VII பிரிவு 168(1) இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எனினும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இரண்டு மாதகால தாமதத்தின் பின்னர் 2018 யூன் 18 ஆம் திகதியே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 9% தொடக்கம் 71% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) பேரேடுகள் நாளது வரையாக முறையாக பேணப்படுதல் வேண்டும். |
| | (ii) சொத்துக்கள் செலவீனங்களின் தன்மை அடிப்படையில் வகைப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |
| | (ii) களஞ்சியப் பேரேடு முறையாகப் பேணப்படல் வேண்டும். |
| (இ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) ஒப்பந்த முகாமைத்துவம் | (i) ஒப்பந்தங்கள் வழங்கப்படும் போது பெறுகை வழிகாட்டி பின்பற்றப்படுதல். |
| | (ii) ஓப்பந்த வேலைகளை குறித்த காலத்தில் முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| | (iii) மதிப்பீடுகளை வினைத்திறனான வகையில் தயாரிக்க வேண்டும். |